**வீரபாண்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகள்**

முன்னிலை: முனைவர் (திருமதி).சி.கௌசல்யா, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,

---

**நக.எண்:198/அ/ 2020, நாள்: 13.09.2021**

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி பணியமைப்பு – தேனி மாவட்டம், வீரபாண்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி - நேரடி நியமனம் – தொகுதி IV – 2018-2019 மற்றும் 2019-2020 ஆண்டுகளுக்கு தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டது - திரு.சே.முத்துராஜா இளநிலை உதவியாளர் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் கடித ந.க.எண்.2361/PSD-1/2020, நாள்: 29.05.2020.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் கடித ந.க.எண்.2361/PSD-E1/2020, நாள்: 22.09.2020 மற்றும் 27.02.2021.
3. சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.16252/பி1/2020, நாள்: 27.08.2020 .
4. இவ்வலுவலக முதல்வர் செயல்முறைகள் ந.க.எண்.198/ஆ/2020 நாள்: 29/08/2020.
5. சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.16252/பி1/2020, நாள்: 07.09.2020 .

---

பார்வை 1 மற்றும் 2-இல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடிதத்தில் தொகுதி IV 2018-2019 மற்றும் 2019-2020 ஆண்டுகளுக்கு தெரிவு செய்யப்பட்டு, இளநிலை உதவியாளராக பணிபுரிய இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. பார்வை 3-இல் காணும் சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி இக்கல்லூரிக்கு இளநிலை உதவியாளராக பணிநியமன ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பார்வை 4-இல் காணும் இக்கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகளின்படி தனியருக்கு பணிநியமனம் செய்யப்பட்டு 04.09.2021 முற்பகல் திரு.சே.முத்துராஜா இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்தார்.

இதனைத் தொடர்ந்து பார்வை 5-இல் காணும் சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் கோரப்பட்டதற்கு இணங்க, பார்வை 4-இல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி திரு.சே.முத்துராஜா இளநிலை உதவியாளர் என்பார் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்க்கண்ட நிபந்தனைகளை தெரிவித்து பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

"இப்பணி வரன்முறை தொகுதி IV 2018-2019 மற்றும் 2019-2020 பணி நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள இறுதி தீர்ப்பாணைக்குட்பட்டது"

--2

தனியர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு தொடர்ச்சியான பணிகாலத்தில் இரண்டாண்டுகள் தகுதி காண் பருவ காலத்தில் வைக்கப்படுவார் என்று, இக்காலகத்திற்குள் பவானிசாகர் மற்றும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

ஜி. கௌசல்யா 13/09/20

முதல்வர்.

முதல்வர்
அரசு கலை (ம) அறிவியல் கல்லூரி
வீரபாண்டி - 625 534
தேனி மாவட்டம்.

பெறுநர்:

திரு.சே.முத்துராஜா இளநிலை உதவியாளர்

13/09/2021

நகல்:-

1. கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை
2. உபரி-2